# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 2007 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலை (கூட்டிணைத்தல்) சட்டம்

---

*(2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2007, ஒற்றோபர் மாதம் 26 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை : ரூபா 10.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

## 2007 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலை (கைமாற்றல்) சட்டம்

*[2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஒ. 62/2005*

**கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேதப் போதனா வைத்திய சாலையை ஆயுள்வேதத் திணைக்களத்துக்குக் கைமாற்று வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற் கானதொரு சட்டம்**

*கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயம் என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான கல்லூரியொன்று, (இதனகத்துப் பின்னர் "வித்தியாலயம்" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயம் என்ற பெயர் மகுடத்தின்கீழ் 1982 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்கச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டதாதலாலும் :* *முன்னுரை.*

*அத்துடன், மருத்துவ மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும், நோயாளர்களுக்கு இலவச மருத்துவ உதவி வழங்குவதற்கும், சொல்லப்பட்ட வித்தியாலயத்தினால் ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலையொன்று தாபிக்கப்பட்டுப் பேணப்பட்டுள்ளதாத லாலும், அது கூட்டிணைக்கப்பட்டதிலிருந்து சொல்லப்பட்ட வித்தியாலயத்தின் கீழ் அத்தகைய வைத்தியசாலை பணியாற்றி யிருந்ததாதலாலும் :*

*அத்துடன் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக் கழகங்கள் சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவின்கீழான கட்டளை யொன்றின் மூலம் சொல்லப்பட்ட வித்தியாலயமானது, உயர் படிப்புக்கான நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்டு சொல் லப்பட்ட ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலை களனிப் பல்கலைக்கழகத்துக்குக் கைமாற்றப்படுவதை விளைவிக்கும் வகையில் சொல்லப்பட்ட களனிப் பல்கலைக்கழகத்துடன் இணைக் கப்பட்டதாதலாலும் :*

*அத்துடன், சொல்லப்பட்ட களனிப் பல்கலைக்கழகமானது, சொல்லப்பட்ட ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலையைக் கையேற்று முகாமைசெய்யுமாறு அரசை வேண்டியுள்ளதாத லாலும், அத்தகைய கைமாற்றத்தகு ஏற்பாடுசெய்வது பொது மக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :*

*ஆகவே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :*

2 –PL 001976– 1,200 (2007/05)

சுருக்கப் பெயரும் நடை முறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம் 2007 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலை (கைமாற்றற்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படுவதான) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேதப் போதனா வைத்திய சாலையை ஆயுள்வேதத் திணைக் களத்திற்கு கைமாற்றல்.

**2.** (1) ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், 1995 பெப்புருவரி 23 ஆம் தேதிய 859/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டதுமான கட்டளையின் பயனாகக் களனிப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டு கம்பஹா விகரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயத்துடன் சேர்க்கப்பட்டதும், நியமிக் கப்பட்ட தேதிக்கு நேர் முற்போந்த நாளன்று வைத்தியசாலையின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்ட எத்தகைய விவரணத்தின வையுமான எல்லா நிறுவுதல்களும், பொறித் தொகுதிகளும், சாதனங்களும், ஆதனங்களும் உட்பட்டதும், இதற்கான அட்ட வணையில் இன்னமும் முழுமையாக விபரிக்கப்படுகின்றதுமான ஆயுள்வேதப் போதனா வைத்தியசாலை, நட்டஈடாக அல்லது வேறுவகையாக அது தொடர்பில் எத்தகையதுமான ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படாமல், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆயுள்வேதத் திணைக்களத்துக்குக் கைமாற்றப்பட்டதாதல் வேண்டும்.

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத வித்தியாலயத்தின் ஊழியர்களாக வுள்ள எல்லா ஆட்களுக்கும் ஆயுள்வேதத் திணைக்களத்தில் தொழில் முனையப்படுதல் வேண்டுமென்பதுடன், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவர்களினால் ஆக்கப்பட்ட நியதிநிபந்தனைகளிலும் பார்க்க அனுகூலம் குறையாதனவாக வுள்ள நியதிநிபந்தனைகளின்மீது அவர்கள் அத்தகைய திணைக் களத்தினால் தொழிலுக்கமர்த்தப்படுதலும் வேண்டும் ; அத்துடன் வைத்தியசாலையின் பணியாட்டொகுதிக்கு அவர்கள் நியமிக்கப் பட்ட தேதியன்று தொடங்கி இச்சட்டம் நடைமுறைக்கு வருகின்ற தேதியன்று முடிவடையும் அவர்களின் சேவைக்காலப்பகுதி, அரசாங்கத்தின் கீழான ஒய்வூதியமுடைய சேவையாகக் கருதப்படு தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய பதவியை ஏற்றுக்கொள்ளாத அவ்வூழியர்கள், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அவர்களின் சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெற்றவர்களாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஓய்வுபெற்றதன்மேல் அவர்கள் உரித்துடையவர்களாக இருக்கக்கூடிய எவையேனும் நன்மைகளுடன் சேர்த்து மேலதிகமாக, அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படவேண்டிய அத்தகைய தொகையில் அரசாங்கத்திலான நட்டஈட்டு அல்லது பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர்களாதலும் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்தும் அதன்பின்னரும் –

(அ) களனிப் பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்டவையும், வைத்தியசாலை தொடர்பானவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளவையுமான எல்லா வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆயுள்வேதத் திணைக்களத்தினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குகளாகவும் வழக்கு நடவடிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும் படலாம் ;

(ஆ) வைத்தியசாலை தொடர்பாகக் களனிப் பல்கலைக்கழகத்துக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று திருப்திசெய்யப்படாதவையுமான எல்லாத் தீர்ப்புகளும் தீர்வைகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆயுள்வேதத் திணைக்களத்துக்குச் சாதகமாகப் பதியப்பட்ட தீர்ப்புகளாகவும் தீர்வைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வலுவுறுத்தவும் படலாம் ;

(இ) வைத்தியசாலை தொடர்பானவையும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இருந்தவையுமான களனிப் பல்கலைக்கழகத்தின் எல்லா உரிமைகளும் பொறுப்புகளும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆயுள்வேதத் திணைக்களத்தின் உரிமைகளாகவும் பொறுப்புகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

**4.** இச்சட்டத்தில் –

"களனிப் பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25ஆ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையொன்றினால் தாபிக்கப்பட்ட களனிப் பல்கலைக்கழகம் என்று பொருளாகும்.

**அட்டவணை** (பிரிவு 2)

மேல்மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், மெதபததுவிலுள்ள யக்கல கிராமத்தில் அமைந்துள்ளதும், 2003 செத்தெம்பர் மற்றும் ஒற்றோபர் எனத் தேதியிடப்பட்டு கம்பஹா நில அளவைகள் கண்காணிப்பாளரான ஐ. ஏ. விஜேதிலக்க என்பவரினால் 2003.11.12 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டதும், கம்/கம் 03/275- பீ ஆம் இலக்கச் சுவடு வரைபடத்தில் காணித்துண்டம் 1 என அடையாளமிடப்பட்டதும், கம்பஹா விக்ரமாராச்சி ஆயுள்வேத வைத்தியசாலைக் கட்டிடத்தொகுதி உட்பட அதன் மீதுள்ள எல்லாக் கட்டிடங்களுடன் பயிர்களுடனும் சேர்த்து கோங்கஹாவத்த எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட சுவடுவரைபடத்தின்படி ஓர் ஏக்கர் முப்பத்தைந்து தசம் ஒன்று இரண்டு பேர்ச்சுக்களை (ஏ01- ரூ0-பே 35.12) கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்